**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60 /2024**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ஆகாஷ் | Caste | : | |
| Father's Name | : | திரு. முத்தையா | Calling | : | |
| Village | : | மாங்கரை கிராமம் | Religion | : | இந்து |
| Taluk | : | திண்டுக்கல் | Age | : | 24 |
| | | | Dated | : | 10.10.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

Accused present. Both side counsels present.

பட்டியல் சாட்சி 8 திரு. ஆகாஷ் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா.7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டாஸ்மார்க் குடோனில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 06.08.2023ம் தேதி மதியம் 02.30 மணி அளவில் வழக்கின் எதிரி வீட்டின் முன்பு சத்தம் கேட்டு அங்கு சென்றேன். நானும், சரவணக்குமாரும் அங்கு நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது கன்னிவாடி போலீசார் அங்கு வந்து எங்களை விசாரித்தனர். அதன் பிறகு அவர்கள் பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள். அதற்காக எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் சேர்த்து சரவணக்குமாரும் கையெழுத்து

போட்டார். அந்த பார்வை மகஜர் Ex. P6. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கில் இறந்து போன புகழ்நாதன் எனது பெரியப்பா மகன் ஆவார். சண்டை நடந்து அரை மணி நேரத்திற்குள் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்து என்னுடைய பெயர், அப்பா பெயர், என்ன வேலை என்று எழுதி வாங்கிக் கொண்டார்கள். அதில் என்ன எழுதி இருக்கிறார்கள் என்று படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், என் முன்னிலையில் போலீசார் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்றும், பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும், இறந்து போன நபர் எனது பெரியப்பாவின் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.10.10 18:36:25 +0530